reported that it is not possible to take up the renovation of the tank as it has been found to be not worth consideration from the aspect of return and food production.

1-30 p.m. **Sri K. R. VISWANATHAN**: இந்தப் புதுக்குடி ஏரி என்பது பழைய காலத்தில் அந்தத் தாலுகாவிற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து கொடுத்துக்கொண்டிருந்த ஏரி. அது, உடைந்து பாழாகிப் போயிருக்கிறது. இப்பொழுதும் இதன் கரை ஐந்து மைல் நீளத்திற்கு இருப்பதைப் பார்க்கலாம். அத்தகைய ஏரியைப் புதுப்பித்தால் சர்க்காருக்கு லாபம் இல்லாவிட்டாலும், நூறு ஏக்கர்களுக்கு மேல் பாசான வசதிக்கு கொண்டுவர முடியும் என்ற எண்ணம் அந்த வட்டார மக்களிடையே இருக்கிறது. ஆகவே, அதை புனர் பரிசீலனை செய்வதற்கு சர்க்கார் உத்தரவு இடுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: என்னிடம் உள்ள தகவல்படி இது, எஸ்டேட்டை சேர்ந்த டாங்க். இது, அபாண்டண்ட் டாங்க். இதற்கு ரெஜிஸ்டரேர்ட் ஆயக்கட்டு இல்லை. ரயத்துவாரி செட்டில்மெண்ட் ஆன பிற்பாடுதான், இந்தமாதிரி ஏரிகளை எந்தமாதிரி என்னென்ன விதத்தில் செய்யலாம் என்பதைப்பற்றி யெல்லாம் நிர்ணயம் செய்யப்படும். ரயத்து வாரீ செட்டில்மென்ட் ஆனபின் இது எடுத்துக்கொள்ளப்படும். புட் ப்ரொடக்ஷன் அதிகமாவதற்கு இது பிரயோஜனப்படாது என்று ரிப்போர்ட் வந்திருப்பதால் இதைப் பின்னர் எடுத்துக்கொள்ளலாம்.

Minimum wages

* 14 *Q*.—**Sri N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Industries be pleased to state whether minimum wages recommended by the Minimum Wages Central Advisory Board during July 1955 have been implemented among A, B, C and D classes of workers in the State?

The Hon. Sri R. VENKATARAMAN: A statement [a] is placed on the table of the House.

Sri N. K. PALANISAMI: லோக்கல் போர்ட்டில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு இந்தக் குறைந்தபட்ச சம்பளம் அமுலாக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: தனிக் கேள்வி வேண்டும். இது, எ. பி. ஸி. டி. க்ளாஸ்ஸ் தொழிலாளர்களுக்கு என்ன குறைந்த பட்ச கூலி கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றியதாகும்.

Sri J. MATHA GOWDER: இந்தப் பேப்பரில், மைக்கா தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைத் தவிர என்று போடப்பட்டிருக்கிறது. மைக்கா தொழிலில் என்ன குறைந்த லாபம் கிடைக்கிறது என்பதினாலா ? அல்லது அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டாம் என்பதினாலா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இந்த ராஜ்யம் பூராவிலும் இந்தத் தொழிலில் 250 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். ஆகவே அதற்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டியதில்லை.

---

a Printed as Appendix IV on page 47 infra.

20th April 1959]

Sri N.K. PALANISAMI : 59-வது வருடத்திற்குள் விவசாய கூலிகளுக்கு கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது தாக்கீது வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

The Hon. Sri R. VENKATARAMAN : தாக்கீது ஒன்றும்வருவதில்லை, நாமே முடிவு செய்திருக்கிறோம். விவசாயத் தொழிலாளர்களுக்கு 1959-வது வருட இறுதிக்குள்ளாக குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்கிறோம் என்று சட்ட சபையிலேயே சொல்லியிருக்கிறோம் ; 57–வது வருடத்திலேயே இந்தியன் லேபர் கான்பரன்ஸில் சென்னை ராஜ்ய சர்க்கார் சொல்லியிருக்கிறது. ஆகவே இந்த வருட இறுதிக்குள் நிர்ணயம் செய்யப்படும்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : ஏ, பி,ஸி,டி. என்ற பிரிவுகளுக்குள், நெசவுத் தொழிலாளர்களும் இதில் உள் அடங்கியிருக்கிறார்களா ? அவர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : சேர்க்கப்படவில்லை.

Report of Sriman Narayan Committee on Prohibition.

* 15 *Q.*—**Sri A. VEDARATHNAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு வேலை நடைபெற்றுவரும் இடங்களைப் பரிசீலிக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நியமித்த ஸ்ரீமன் நாராயண் கமிட்டியாரின் அறிக்கை நம் மாநில சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(ஆ) அப்படியானால் அதன் சாராம்சம் என்ன ?

(இ) பதனீர் விற்பனை பற்றி அக் கமிட்டியார் அபிப்பிராயம் என்ன ?

(ஈ) அவ்வறிக்கையின் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கும் இனங்கள் எவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) A Prohibition Enquiry Committee was constituted under the Chairmanship of Sri Shriman Narayan during 1954–55, by the Planning Commission of the Government of India and not by the All-India Congress Committee. Presumably, the Member refers to this Committee. If so, the answer to this clause is in the affirmative.

(*b*) In respect of the States where Prohibition was already in force, the Committee desired that the Prohibition Programmes in those States would continue but with greater vigilance and with specific additional measures to ensure better and more concrete results.

(*c*) The Committee did not make any specific recommendation on the question of the sale of padani.

(*d*) Necessary action was taken already on such of the recommendations which were applicable to this State.